மூன்றாவதாக புழல் கிராமத்தில் புதிய 110/11 கிலோ வாட் டுக்குள் உப மின் நிலையத்தை நிறுவி ஆவடி உப மின் நிலையத் தையும் நிறுவி ஆவடி உப மின் நிலையத்திற்கும் மின் பளுவினை குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். ஒரு பகுதி பளுவினை, திருநின்றவூர் என்கின்ற பகுதியிலிருந்து, 33/11 கிலோவாட் என்கின்ற உப மின் நிலையம் மூலம் மாற்றியமைப்ப தற்கு மின் சப்ளை கொடுப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக் கிறோம்.

ஆக இது போக, டிஸ்ட்ரிபியூஷன் என்று சொல்கின்ற அந்த மின் பகிர்மானத்தைப் பற்றி உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அந்த லோ வோல்டேஜ் என்று சொல்கின்ற அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்குமான பல்வேறு நடவடிக்கைகளை இந்தப் பகுதியிலே எடுத்திருக்கிறோம். ஆகவே இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலேயும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டிருக்கின்றது என்ற காரணத்தினாலே இனிமேல் 'டப், டப்' என்ற சத்தம் வராது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காளன் கேள்வியாகக் கேளுங்கள்.

முற்பகல் 10-15

திரு. கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32. திரு. எஸ். எம். கிருஷ்ணன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

32—

இரயில்வே மேம்பாலம்.

* 3917—திரு. எஸ். எம். கிருஷ்ணன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாம்பரம்-வேளச்சேரி சாலையிலுள்ள இரயில்வே லேவல் கிராசிங்கில் மக்கள் நலம் கருதி மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

1992 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசிடம் இதுபற்றிய செயற் குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 33. திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

33—

வள்ளிமதுரம் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்

* வினா எண் 1266—திரு. ச. புரட்சிமணி:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டத்தில் மங்களூர் தொகுதியில் வள்ளி மதுரம் கிராமத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அர சிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் மங்களூர் மற்றும் 24 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடி-நீர்த் திட்டத்தில் வள்ளிமதுரம் கிராமம் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது.

திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, என்னுடைய தொகுதியில் உள்ள வள்ளிமதுரம் கிராமம் மிகவும் உள்ளடங்கிய கிராமம் ஆகும். அந்தக் கிராமம் வறட்சி யான கிராமம் ஆகும். அதனால் அந்தக் கிராமத்திற்கு நிரந்தர மாக குடிநீர்ப் பிரச்னையில் தீர்வு காண அரசு ஏதாவது வழி காணுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று, அதை குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில் நுட்பக் குழுவின் அறிக்கையுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. விரைவில் ஆய்வுப் பணிகள் முடிக்கப்படுவதற்கு அரசின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 34 திரு. கே. தேவி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.